# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2121/43 - 2019 මැයි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.02

*2121/43 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/1978* (x)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PB *4833 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2018, ஏப்பிறல் 19 ஆந் திகதிய 2067/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை* II *ஐ, அதன் நிரல்* I *இலும் நிரல்* II *இன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “கணினி வலையமைப்பில் விஞ்ஞான இளமாணி” என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை* II *இன் முறையே நிரல்* I *மற்றும்* II *இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

*நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட், இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட சர்வதேச வர்த்தகத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும்போது, க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03)* 'S' *சித்திகளென்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.*


1A - PG 4499 — 517 (2019/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** II

| *நிரல் I*<br><br>*பட்டம்* | *நிரல் II*<br><br>*பட்டத்திற்கான சுருக்கம்* |
|---|---|
| சர்வதேச வர்த்தகத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜீரீ கௌரவ (சர்வதேச வர்த்தகம்) |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019, ஏப்பிறல் 30.*

*05-317*